ஆனைமலை பேரூராட்சி
கோயம்புத்தூர் மாவட்டம்
**2021–2022 ம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதி**
**ஒப்பந்தப்புள்ளி அழைப்பு**

ந.க.எண்.49 /2022 நாள்:- 11.05.2022

கோயம்புத்தூர் மாவட்டம் ஆனைமலை பேரூராட்சியில் 2021–2022ம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதியின் கீழ் கீழ்கண்ட பணிகளுக்கு **26.05.2022**–ம் தேதி பிற்பகல் 3.00 மணி வரை கீழே கையொப்பமிட்டவரால் (அ) அவரது அங்கீகாரம் பெற்றவரால் ஆனைமலை பேரூராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்தாரர்களிடமிருந்து மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது. ஒப்பந்தப்புள்ளிகளுக்கான டேவணித் தொகையை **25.05.2022**–ம் தேதி 3.00 மணிக்குள் பேரூராட்சி அலுவகத்தில் ரொக்கமாகவோ அல்லது ஆனைமலை பேரூராட்சி செயல் அலுவலர் என மாற்றத்தக்க வகையில் வங்கி வரைவோலையாகவோ செலுத்தி ரசீது அல்லது வங்கி வரைவோலை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஒப்பந்தப்புள்ளி ஷெட்டியூல் படிவங்களை **26.05.2022** தேதி பகல் 3.00 மணிக்குள் உரிய தொகை செலுத்தி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் **26.05.2022** தேதி பிற்பகல் 3.30 மணிக்கு அப்போது வருகை தந்துள்ள ஒப்பந்தாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும். ஒப்பந்ததாரர்கள் நிபந்தனைகள் மற்றும் ஒப்பந்தப்புள்ளி சம்பந்தமான கூடுதல் விபரங்கள் கீழ்காணும் இணையதள முகவரியில் இணைக்கப்பட்டுள்ளது.

மேலும் மதிப்பீட்டுத் தொகை ரூ.10.00 இலட்சத்திற்கு மேல் உள்ள பணிக்கு ஒப்பந்தப்புள்ளி அளிக்க விருப்பமுள்ளவர்கள் கீழ்க்கண்ட இணையதளத்தில் ஒப்பந்தப்புள்ளி நமுனா நகல் எடுத்தும் அல்லது உரிய கட்டணத்தை பேரூராட்சியில் செலுத்தியும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளலாம். இணையதள முகவரி :www.tenders.tn.gov.in

**சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதி-2021-2022**

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. (லட்சத்தில்) | டெண்டர் டெபாசிட் ரூ. | ஷெட்டியூல் கட்டணம் ரூ. |
|---|---|---|---|---|
| 1 | உப்பிலியர் வீதி முதல் 1வது வார்டு பழனியப்பா கார்டன் வரை உள்ள பகுதிகளில் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | 4,50,000/– | 4500/– | ரூ.750+ (GST) |
| 2 | 14வது வார்டு ராமு வீதி மற்றும் தட்டார் வீதியில் வடிகாலுடன் கூடிய சிறுபாலம் கட்டுதல் | 11,75,000/– | 11750/– | ரூ.6000 + (GST) |

(ஒப்பம்) xxxxxxx
தலைவர்
ஆனைமலை பேரூராட்சி
ஆனைமலை

(ஒப்பம்) xxxxxxx
செயல் அலுவலர்
ஆனைமலை பேரூராட்சி
ஆனைமலை

/உண்மை நகல்/

செயல் அலுவலர்
ஆனைமலை பேரூராட்சி